**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் -2, பொள்ளாச்சி.**

**முன்னிலை திரு.E.பிரகாசம், பி.ஏ., பி.எல்.,**

**நீதித்துறை நடுவர் எண்-2, பொள்ளாச்சி.**

**2026-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01 ஆம் நாள் புதன் கிழமை**

**பட்டிகை விசாரணை வழக்கு எண்.442/2025**

**(CNR NO: TNCB120024212025)**

தமிழ்நாடு அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர்,
பொள்ளாச்சி மேற்கு காவல் நிலையம்,
காவல் நிலைய குற்ற எண். 134/2025 ...குற்றமுறையிடுபவர்

// எதிர் //

பிரித்திவிராஜ்குமார் (33/2025),
த/பெ. முருகன்,
23 குரும்பபாளையம் ரோடு,
டி.கோட்டாம்பட்டி, மகாலிங்கபுரம்,
பொள்ளாச்சி.
தற்போது 12 கருப்பசாமி தெரு,
பொள்ளாச்சி, ...எதிரி

இவ்வழக்கானது கடந்த 13.05.2025 -ஆம் தேதி இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அரசுக்காக அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எதிரிக்காக வழக்கறிஞர் திரு.A. அன்வர்பாட்சா B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இந்த வழக்கில் இந்நீதிமன்றம் இன்று வழங்கும்,

**//தீர்ப்புரை//**

**1. குற்ற இறுதி அறிக்கை சுருக்கம்**

கடந்த 30.03.2025 ம் தேதி 20.00 மணிக்கு பொள்ளாச்சி மேற்கு காவல்நிலைய சரகம், குப்புசாமி வீதியில் உள்ள கதவு எண் 12 ல் குடியிருக்கும் சாட்சி 1 பிரதீபா என்பவர் 7 மாத கைக்குழந்தை கிர்த்விக் என்பவரை மடியில் வைத்திருந்தபோது குடிபோதையில் இருந்த

எதிரி பிரித்விராஜ்குமார் என்பவர் குழந்தையை எடுத்துள்ளார். குழந்தை அழவே சாட்சி 1 குழந்தையுடன் பாத்ரூம் சென்றிருந்த சமயத்தில் எதிரியானவர் பெரிய மகன் சாட்சி 2 சமீத் என்பவரை கையால் வலது கன்னத்தில் அடித்துள்ளார். அதைப் பார்த்த சாட்சி 1 எதிரியிடம் எதற்கு என் மகனை அடிக்கிறீங்க என்று கேட்டதற்கு எதிரியானவர் ஏன்டி கண்டாரோழி முண்டை என் மகனை நான்அடிச்சா உனக்கு என்னடி என்றும், அதை தடுக்க வந்த சாட்சிகள் 3 மற்றும் 4 ஐ தாயோழி மகனே தேவடியா முண்டை என்று பொது மக்கள் கேட்கும் விதமாக கெட்ட வார்த்தைகளால் திட்டி சாட்சிகளுக்கு அவமானத்தையும் மனஉளைச்சலையும் ஏற்படுத்தியுள்ளார்.

மேலும் எதிரி, சாட்சி 1 ஐ கையால் இடது கன்னம், முதுகிலும், வலது கன்னத்திலும், சாட்சி 3 மற்றும் 4 ஐ கையால் மாறி மாறி அடித்து சாட்சிகளுக்கு சாதாரண காயத்தையும், மேலும் சீருடையில் சம்பவயிடம் சென்ற சாட்சி 5 ஐ ஒரு அரசு ஊழியர் என்று தெரிந்தும் அவரது கடமையை செய்ய விடாமல் தடுத்து சாட்சி 5 ஐப் பார்த்து உன் வேலையைப் பார்த்துட்டு போடா, நீ என்ன பெரிய புடுங்கியாடா தாயோழி மகனே என்று கெட்ட வார்த்தையால் திட்டியதாகவும், மேலும் சாட்சி 1 ஐப் பெண் என்றும் பாராமல், எதிரி, பொது இடத்தில் வைத்து அவரது தலை முடியைப் பிடித்து உன்னைக் கொல்லாமல் விடமாட்டேன்டி என்று கூறி சாட்சி 1 ன் தலையை சுவற்றில் அடிப்பதற்கு இழுத்துச் சென்று சாட்சி 1ற்கு உயிர்பயத்தை ஏற்படுத்தியதாகவும் தெரிவித்து எதிரி மீது சட்டப்பிரிவுகள் 296(b), 115(2), 132, 351(3) of BNS மற்றும் Sec. 4 of TNPHW Act- ன் படி தண்டிக்கத்தக்க குற்றம் செய்துள்ளார் என்று பொள்ளாச்சி மேற்கு காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>2. அரசு தரப்பு வழக்கின் சராரம்சம் பின்வருமாறு.</u>**

மேற்படி குற்ற இறுதி அறிக்கையில் கண்டுள்ள வழக்கு சம்பந்தமாக கடந்த 31.03.2025 ம் தேதி 10.00 மணிக்கு பொள்ளாச்சி மேற்கு காவல்நிலையத்தில் தலைமைக் காவலர் சுப்பைய என்பவர் நிலையப் பொருப்பில் இருந்தபோது அ.சா.1 பிரதீபா என்பவர் நிலையம் ஆஜராகி **அ.சா.ஆ.1 புகாரைக்** கொடுத்துள்ளார். மேற்படி புகாரைப் பெற்ற தலைமைக் காவலர் புகாரின் அடிப்படையில் **அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை** பதிவு செய்துள்ளார். பின்னர் வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவயிடம் சென்று சாட்சிகள் ராஜேந்திரன் மற்றும் மனோஜ் குமார் ஆகியோர்கள் முன்னிலையில்

சம்பவயிடத்தைப் பார்வையிட்டு **அ.சா.ஆ.4 பார்வை மகசர் மற்றும் அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம்** தயார் செய்துள்ளார். பின்னர் எதிரியைக் கைது செய்து நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தி தனது புலன் விசாரணை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவுகள் 296(b), 115(2), 132, 351(3) of BNS மற்றும் Sec. 4 of TNPHW Act- ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக அரசு தரப்பு வழக்கு. **சமாதான மனுவில் உள்ள சாட்சிக் கையொப்பம் அ.சா.ஆ. 2** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**3. வழக்கு நகல்கள் பிரிவு 230 BNSS-ன் கீழ் வழங்கப்பட்டது**

இந்த வழக்கானது 13.05.2025 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரி ஆஜரானதும் பிரிவு. 230 BNSS-ன் கீழ் வழக்காவணங்களின் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

**4. எதிரியிடம் பிரிவு 351(1)(அ) BNSS-ன் கீழ் குற்றம் வினவி கேட்கப்பட்டது**

அரசு தரப்பு ஆவணங்களை பரிசீலித்து பின்னர் இந்நீதிமன்றத்தால் விசாரணை செய்தும் தண்டிக்க கூடியதுமான குற்றம் புரிந்திருப்பதாக அனுமானிக்க போதிய காரணங்கள் இருந்தபடியால், எதிரி மீது சட்டப்பிரிவுகள் 296(b), 115(2), 132, 351(3) of BNS மற்றும் Sec. 4 of TNPHW Act- ன் கீழ் **குற்றச்சாட்டுகள் விளக்கிக்கூறி வினவியபோது,** எதிரி குற்றத்தை மறுத்தார். ஆகவே அரசுத் தரப்பு சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**5. அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றவணங்களின் விவரம்**

அரசு தரப்பில் **அ.சா.01 முதல் அ.சா.02 வரையான சாட்சிகள்** விசாரிக்கப்பட்டு **அ.சா.ஆ.01 முதல் அ.சா.ஆ.05 வரையிலான ஆவணங்கள்** குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிதரப்பில் சாட்சி, சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**6. எதிரியிடம் பிரிவு 351(1)(ஆ)-ன் கீழ் குற்றம் வினவி கேட்கப்பட்டது**

அரசுத்தரப்பு சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றிய சாட்சியங்கள் குறித்து **கு.வி.மு.ச. பிரிவு. 351(1)(ஆ) BNSS-ன் கீழ் வினவியபோது,** எதிரி பொய் சாட்சி என்றும், இந்த வழக்கு பற்றி பொதுவாக ஏதாவது கூற வேண்டுமா? என்று வினவிய போது பொய் வழக்கு என்றும், தங்கள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார். எதிரி தரப்பில் சாட்சிகள் இல்லை என்று கூறியதன் பேரில் எதிரி தரப்பு சாட்சி விசாரணை முடிக்கப்பட்டது.

**7. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை**

**1) எதிரி மீது சட்டப்பிரிவுகள் 296(b), 115(2), 132, 351(3) of BNS மற்றும் Sec. 4 of TNPHW Act-ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

**அ.சா.1 தனது முதல்விசாரணையில்,**

நான் தற்போது எல் ஐ சி காலனியில் குடியிருந்து கொண்டு இரண்டாம் நிலைக் காவலராக உக்கடம் காவல்நிலையத்தில் பணியாற்றி வருகிறேன். கடந்த 2024 ம் வருடம் ஆகஸ்ட் மாதம் தேதி ஞாபகம் இல்லை. ஆஜர் எதிரி எனது கணவர் ஆவார். மேற்படி தேதியில் எனது கணவர் மதுபோதையில் வந்து நான் குழந்தைக்கு சாப்பாடு ஊட்டிக் கொண்டிருக்கும்போது தகாத வார்த்தைகளால் பேசி கையால் அடித்து தள்ளிவிட்டார். நான் சுவற்றில் விழுந்துவிட்டேன். இது குறித்து பொள்ளாச்சி மேற்கு காவல்நிலையத்தில் புகார் அளித்தேன் தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். மேற்படி புகார் அ.சா.ஆ.1 ஆகும். நான் எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டேன். சமாதான மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அது அ.சா.ஆ.2 ஆகும். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**அவர் தனது குறுக்குவிசாரணையில்,** எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டேன் என்றால் சரிதான். எதிரியின் மீது எந்த மேல் நடவடிக்கையும் எடுக்க வேண்டாம் என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.2, இவ்வழக்கினை புலன்விசாரணை செய்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த புலன்விசாரணை அதிகாரிக்கு பதிலாக சாட்சியம் அளித்த ஆவணசார் சாட்சி ஆவார்.

**8) மேலும் கடந்த 17.12.2025 ல் புகார்தாரரான அ.சா.1, எதிரியுடன் சேர்ந்து பிரிவு 359 BNSS -ன் கீழ் சமாதானம் ஆகிவிட்டதாக கூறி மனு தாக்கல் செய்யப்பட்டு அது MP No.01/2025 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு 17.12.2025-ல் தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ளது.**

9) எதிரி மீது சட்டப்பிரிவுகள் 296(b), 115(2), 118(2), 351(3) of BNS- ன் கீழ் குற்றச்சாட்டு முன்னிலைப்படுத்தி அதனை நிரூபணம் செய்வதற்கு ஆதரவாக அ.சா.01 முதல் அ.சா. 02 வரையிலான சாட்சிகளின் சாட்சியங்களையும், அ.சா.ஆ.01 முதல் அ.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்களையும் முன்னிலைப்படுத்தியுள்ளனர். எனினும், அ.சா.1-ன் சாட்சியம் அரசு தரப்பு வழக்கை நிரூபணம் செய்யும் விதமாக இல்லை. மேலும் அ.சா.1 அரசு தரப்பு வழக்கிற்கு முரணாகவே சாட்சியங்கள் அளித்துள்ளார்.

மேலும் அ.சா.1, எதிரியுடன் சமாதானம் செய்து கொண்டதாக தனது சாட்சியத்தில் சாட்சியம் அளித்துள்ளார். அது குறித்து பரிசீலிக்கையில்,

Madan Mohan Abbot v. State of Punjab

[2008 A.I.R SCW 2287]. என்ற மாண்புமிகு உச்சநீதிமன்ற வழக்கில் பத்தி 5-ல்

We need to emphasize that it is perhaps advisable that in disputes where the question involved is of a purely personal nature, the Court should ordinarily accept the terms of the compromise even in criminal proceedings as keeping the matter alive with no possibility of a result in favour of the prosecution is a luxury which the Courts, grossly overburdened as they are, cannot afford and that the time so saved can be utilized in deciding more effective and meaningful litigation. This is a common sense approach to the matter based on ground of realities and bereft of the technicalities of the law. என்று கூறப்பட்டுள்ளது.

மேற்படி மாண்புமிகு உச்சநீதிமன்ற வழக்கில் கூறப்பட்டதன் படி இவ்வழக்கிலும் எதிரிக்கு எதிரான குற்றமானது தனிநபரான அ.சா.1 சம்மந்தப்பட்டதாகவும் எதிரியுடன் சமாதானமாக ஆகிவிட்டதாக அ.சா.1 மனு தாக்கல் செய்து சாட்சியம் அளித்துள்ளார்.

10) வழக்கில் புகார்தாரரான அ.சா.1ன் சாட்சியம், அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக உள்ள நிலையிலும், அ.சா.1, எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டதாக சாட்சியம் அளித்துள்ள நிலையிலும் மேற்படி சங்கதிகளை பொறுத்து அரசு தரப்பில் வேறு சாட்சிகளையோ, சான்றாவணங்களையோ முன்னிலைப்படுத்தாத நிலையில், எதிரி மீதான சட்டப்பிரிவுகள் 296(b), 115(2), 132, 351(3) of BNS மற்றும் Sec. 4 of TNPHW Act- ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**11. முடிவாக,**

எதிரிக்கு எதிரான வனையப்பட்ட சட்டப்பிரிவுகள் 296(b), 115(2), 132, 351(3) of BNS மற்றும் Sec. 4 of TNPHW Act- ன் ன் கீழான குற்றச்சாட்டு பொறுத்து குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து, 271(1) of BNSS -ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

**12. வழக்கு சொத்து**

இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

என்னால் இத்தீர்ப்புரை சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு பின்னர் அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01 ம் நாள் என்னால் இந்நீதிமன்றம் அவையறிய பகரப்பட்டது.

**ஒ/ம். E. பிரகாசம் B.A., B.L.,**
**நீதித்துறை நடுவர் எண்-2,**
**பொள்ளாச்சி.**

**11. அரசு தரப்பு சாட்சிகள்**

| | |
|---|---|
| **அ.சா.1** | பிரதீபா |
| **அ.சா.2** | பழனி - காவல் உதவி ஆய்வாளர் |

**12. அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| | |
|---|---|
| **அ.சா.ஆ.1** | புகார் |
| **அ.சா.ஆ.2** | சமாதான மனுவில் உள்ள சாட்சிக் கையொப்பம் |
| **அ.சா.ஆ.3** | முதல் தகவல் அறிக்கை |
| **அ.சா.ஆ.4** | பார்வை மகசர் |
| **அ.சா.ஆ.5** | மாதிரி வரைபடம் |

**13. அரசுதரப்பு சான்று பொருள்: -** இல்லை

**14. எதிரி தரப்பு சாட்சி சான்றாவணம் மற்றும் சான்றுபொருள்:** இல்லை

**15. குறிப்பு:**

1. வழக்கின் முடிவு பற்றி காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
2. எந்த ஒரு சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைத்து விசாரிக்கப்படவில்லை.
3. வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்து வந்தார்.

**ஒ/ம். E. பிரகாசம் B.A., B.L.,**
**நீதித்துறை நடுவர் எண்-2,**
**பொள்ளாச்சி.**

**//உண்மை நகல்//**

**நீதித்துறை நடுவர் எண்-2,**
**பொள்ளாச்சி.**

**நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது**
மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கோயம்புத்தூர்.